


தொகுதி - 9 பகுதி - 12

புரட்டாசி 1 17-9-87

உ

சிவ சிவ

நமரங்காள் !

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்
குற்றம் தமதே பிறிதன்று — முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை உணரா தார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன் ?

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

கற்றவர்கள் தாம் கற்ற நூல் நயங்களைக் கல்லாதவர்கள் செவியில் வலியப் புகுத்தி அவர்கள் அதை வரவேற்க வில்லையே என்று வருந்தினால், அக்குற்றம் கற்றவர்களுடையதேயாகும். எல்லாம் அறிந்திருந்தும் கல்லாதார் தன்மை உணராத இவர்கள் தம் தரத்தை உணராமல் கல்லாதாரை நோவதால் என்ன பயன்?

# ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்.


சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்

திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணசலம்
செந்தமிழ்க் கலாநிதி
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை திரு. சுவாமிநாதன்


உள்ளே :


1 பெருமான் புகழ்
2 ஸ்ரீ குமரகுருபரர் நெறிவிளக்கம்
3 ஸ்ரீ பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில் மண்டலாபிஷேகம்
4 நகை
5 நூல் நிறை
6 தாயுமானவர் இராமலிங்கர் ஒன்றிய உணர்வு
7 திருச்சதகமும் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும்
8 இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்
9 சிவபோகசாரமும் சொக்கநாத வெண்பாவும்
10 ஆலயபூஜைப்படிக்காசுநிதி

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்!



# பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

“கயிலைமாமுனிவர்” ஸ்ரீலஸ்ரீ

## காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

சிவபெருமானை ஆடையணிகளால் சிங்காரித்துக் கருதுதல், நினைத்தல், சிந்தித்தல், தெரிசித்தல் ஆகியன நல்லடியார்களின் இலக்கணமாகும். “தாயுமிலி தந்தையிலி தான் தமியன்” ஆன அப்பெருமானிக்கு அடியார்கள் தாம்தாம் விரும்பியவாறெலாம் அணிகலன்கள் அணிவித்தும் ஆடைகள் சார்த்தியும் மானுடப் பிறவியின் பேற்றைத் துய்ப்பர். அவ்வடியார்கள் ‘குருவே சிவன்” எனும் உண்மை உணர்ந்தவர்களாதலின் “உன்னைச் சிங்காரித்து உன்னழகு” பார்க்க வேண்டும் என்னும் வேட்கையுடையராயிருப்பர்.

கஞ்சுகம் என்ற சொல் மிகப் பழங்காலத் தமிழிலக்கியங்களிலேயே உள்ளதாகும். கஞ்சுகம் என்பது கழுத்துப் பகுதியில் அதிகத்துணிவைத்துத் தைக்கப் பெறுவது. இக்காலத்தார் அணியும் சட்டையைக் கஞ்சுகம் எனச் சொல்லலாம். “கஞ்சுகமாக்கள்” என வருவதால் இவ்வகைச் சட்டையைக் காவலாளிகள் அணிந்திருந்தனர் எனக் கூறுவர். மணிவாசகப் பெருந்தகை சிவபெருமானுக்குக் குப்பாயம் என்னும் சட்டையை அணிவித்துப் பார்த்து மகிழ்கிறார்.

"வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேல்வந்தென்
உள்ளம் கவர்ந்தவா றன்னே என்னும்"

என்பது அவர்தம் திருப்பாட்டு. 'குப்பாயம் என்பது அரசர் அணிவதோர் ஆடைவகை' இக்காலத்தார் ஜிப்பா எனக் குறிப்பிடுவது இதனையே. கலிங்கம் எனப்பெறும் உயர்ந்தரக வேட்டியையும் சிவபெருமான் அணிந்திருப்பதாக மாணிக்கவாசகர் அறிவித்தருள்கிறார்கள். அது நெய்யப் பெற்ற தேயத்தின் பெயர் ஆடைக்கானதோராகு பெயர் "புலராக் காழகம் புலர உடீஇ" எனவரும் திருமுருகாற்றுப் படைத்தொடரில் அடியார்கள் உடுத்திய ஆடையைக் "காழகம்" எனக் குறிப்பிட்ட திறத்தை இடைப் பிறவரலாக ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

மணிவாசகப் பெருந்தகை சிவபெருமானுக்குக் குப்பாயம் என்னும் ஜிப்பா அணிவித்து அழகு பார்த்தது போல ஸ்ரீ சுவாமிகள் செம்மேனி பெம்மானுக்குக் கருப்பு "நிலையங்கி" அணிவித்து அழகு பார்க்கிறார்கள்.

"கபாய்" என்ற சொல்லுக்குப் பொதுவாகச் 'சட்டை' என்று பொருள் சொல்லிவிடுவார்கள். எனினும் 'நிலையங்கி" என்பதே அதன் பொருளாகும். டாக்டர் உ. வே. சா. அவர்கள் "பெரும் சட்டை" எனக் குறிப்பிடுகிறார்கள். அஃதொக்கும். நிலையங்கி கால்வரை மறைப்பதாகும். எனவே அது பெருஞ்சட்டை எனப் பெறலாம்.

உமையொருபாகத்தனைச் சிவனையும் சிவனொருபாகத்தனை உமையையும் கருதும்போது இந்தக் 'கபாய்' உமைக்கும் உரியதாதலை உணரலாம். அம்முறைமை பற்றியே "கடகளிறுதவு கபாய்பிசைப் போர்த்தவள்" என மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழுள் மாகேஸ்வரியைக் குறிப்பிட்டது.

மணிவாசகப் பெருந்தகையும் ஆன்மாவாகிய பெண் ஆன்ம நாயகனாகிய பெருமானை விரும்பி உரைத்ததாகிய நிலையிலேயே சிவன் குப்பாயம் அணிந்திருந்த செய்தியைக் குறிப்பிட்டருளுகிறார்கள். ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளும் உமையம்மை தழுவிய சிவனின் சிருங்கார மார்பைச் சிங்காரிக்கும் போது கபாயணிந்த செய்தியைத் தெரிவித்தருளுகிறார்கள்.

கம்பக் கரடக் களிற்றின் காபாயணிந்த
அம்பொற் புயத்தாற்கு அமைந்ததால் -- அம்பை
முலையானைக் கோடணிந்த மார்பு.

என்பது சிதம்பரச்செய்யுட் கோவையின் 25 ஆவது திருப்பாட்டு.

உடல் முழுவதையும் மறைக்கும் "கபாய்'' என்னும் நிலையங்கியைச் சிவபெருமான் அணிந்திருக்கிறான் என அறிவித்தருளிய ஸ்ரீ சுவாமிகள் சிவபெருமானின் தோளையும் மார்பையும் வருணிக்கிறார்கள். அங்கி அணிந்த பிறகு மார்பும் தோளும் எப்படித் தெரிகிறது?. அது தைக்காத அங்கி என்பதைக் கவனிப்பதற்காகவே ஸ்ரீ சுவாமிகள் அவ்வாறருளினார்கள்.

அணிந்ததும் யானைத் தோலங்கி, மார்பில் தைத்ததும் இரு யானைக் கொம்புகள் என்று அம்பிகை பெருமானைத் தழுவிய அழகைப் பக்தி நயத்துடன் ஸ்ரீ சுவாமிகள் தெரிவித்தருளுகிறார்கள். யானையை உரித்தவன் யானைக் கொம்பால் வடுப்பட்டான் என நயம்பெறக் கூறுகிறார்கள். "அம்பொற் புயத்தாற்கு முலையானைக்கோடணிந்த மார்பு அமைந்ததால்'' எனக் கொண்டுகூட்டிப் பொருள் காண வேண்டும்.

இந்த நிகழ்ச்சியைச் சிருங்காரரசம் என்று மட்டும் கொள்ள முடியவில்லை. உமையம்மை யானையைச் சிவன் உரித்த காலத்து அஞ்சி ஒதுங்கி இருந்தாள். அச்சம்காரம்

நிறைவேறிய பிறகு சிவஞைத் தழுவினுள் எனப் புராணங்கள் கூறும் முறைமையில் காணும்போது அது அச்சத்தால் ஆரத்தழுவிய தழுவலாகவும் கொள்ள இடமுண்டு.

வழுவூர்த் திருக்கோயிலுள் உள்ள கஜசம்கார மூர்த்தி திருவுருவம் ஈடிணையற்றதாகும். அதன்கண் உமையம்மை அஞ்சியொதுங்கியிருக்கும் காட்சி அதியற்புதமாக வடிக்கப் பெற்றுள்ளது. தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீதாடகையீச்சரம் திருக்கோயிலுள்ளும் சிவபெருமான் கரியுரி போர்த்தது காட்டும் உயிர்ச் சிற்பம் ஒன்றுள்ளது. அச்சிற்பத்தின் மெய்ப்பாடுகள் மிக அருமையானவை. இவற்றில் உமையம்மை அஞ்சி ஒதுங்கியிருக்கும் காட்சி மேற்காணும் நயத்தைக் கருத இடந்தருகிறது.

"கம்பக் கரடக் களிற்றின்" எனத் தொடங்கும் இத் திருப் பாடலையொட்டிக் கீழ்க்காணும் செய்யுள் இலக்கணக் குறிப்புள்ளது.

"இதுவும் அவ்வாறே இருவிதற்பத்தான் வந்தமையால் இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் முதலெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் முற்றுமோனை"

முதலிரண்டடி நாற்சீராகவும் மூன்ருமடி முச்சீராகவும் வந்துள்ளது. எனவே இது சிந்தியல் வெண்பா. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றமையால் நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகிறது. இக்கருத்துக்களையே "இதுவும் அவ்வாறே" என்ற சொற்கள் உணர்த்துகின்றன.

"கங்கைக்குக் கண்மலர்" எனத் தொடங்கும் முன் பாடல் ஒரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா. இப்பாடல் இரு விகற்ப நேரிசை சிந்தியில் வெண்பாவாகும் கம், அம், அம், ஓரெதுகை. முலை என்பது மற்ருெரு எதுகை. எனவே இருவிகற்பமாகிறது.

"கம்பக் கரடக் களிற்றின் கபாயணிந்த" என்ற முதலடியில் நான்கு சீர்களின் முதலெழுத்துக்களும் ஒரே எழுத்து எனவே அவ்வடி முற்றுமோனை அமைந்த அடியாகிறது. இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பாவில் முதலடி முற்று மோனையாக வரவேண்டும் எனப் பொருள் கொள்ள வேண்டியதில்லை. அவ்வாறு வந்துள்ள சிறப்புச் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளது.

—சிவ சிவ

---

சிவமயம் திருச்சிற்றம்பலம்

## திருமயிலைக் காரணீச்சரம்

## பன்னிரு திருமுறை முற்றோதுதல் குழு

11, நாட்டு சுப்பராய முதலித்தெரு. திருமயிலை, சென்னை.

சிவநெறித் திருவுடையீர்!

கயிலையங்கிரில் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம், இம்மயிலையம் பதியிலும் ஒலிக்கக் கலைமாமணி அருளிசை அண்ணல் அரசுக்கலைஞர் இசைப்பேரறிஞர் சிவத்திரு தருமபுரம் ப. சுவாமிநாதன் அவர்களைக் கொண்டு உயிர்க்கு உறுதிதரும் பன்னிரு திருமுறைகளை முற்றும் ஓத வைத்துக் கேட்க ஏற்பாடாகி, ஒவ்வொரு திங்களிலும் ஏதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமையில் காலை 9 - 30 மணிமுதல் 12 - 30 மணிவரை திருமயிலை அருள்தரும் பொற்கொடி அம்பாள் உடனுறை அருள்மிகு காரணீஸ்வரர் திருக்கோயிலில் 25 — 1 — 1987 முதல் ஓதப்பெற்று வருகிறது. சைவ அன்பர்கள் இதனை ஓர் அரிய வாய்ப்பாகக் கருதி, இம் முற்றோதுதல் வேள்வியில் பங்கு கொண்டு, செவிச் செல்வமும், இறையருட் செல்வமும் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

— குழுவினர்.

**விளம்பர அன்பளிப்பு :**

**பாரி. மா. ராஜகணபதி. சென்னை.**

ஸ்ரீ குமரகுருபரர் நீதிநெறிவிளக்கம் 7

# நல்லார் துன்பமும் பொல்லார் இன்பமும் முறையா ?

---

## நெல்லை சிவமணி புலவர் ம. சிவசம்பு எம். ஏ., பாளையங்கோட்டை

உலகில் நல்லார் துன்புறுவதும் பொல்லார் செல்வச்சிறப்போடு வாழ்வதும் செல்வாக்குடன் இருப்பதும் நாம் காணுகின்ற காட்சியாக இருக்கிறது. இதனால் நமக்கு ஒருமயக்கம் உண்டாகிறது. இப்படி நடக்கலாமா? இதுமுறையா? ஏன் இவ்வாறு இருக்கிறது ? இதற்குரிய காரணத்தைப் பற்றிப் பலர் பலவாறு பேசி ஓய்ந்துவிட்டார்கள். இதற்குக் காரணத்தை நம் குமரகுருபரர் தெளிவாக விளக்குகிறார்.

ஒருதந்தை தன் இளையமகனை அடிக்கடிவைகிறார். மூத்தமகனைத் வைவதே இல்லை. அவன் போக்கில் விட்டுவிடுகிறார். தாய்க்குஇது புரியவில்லை. ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்கிறாள்! இளையவன் நல்லவன். நம்மீது நம்பிக்கை வைக்கிறான். தப்புக்கள் செய்யும்பொழுது அவனைவைதால் திருந்துகிறான். மூத்தவன் அவன் மனம்போல் வாழ்கிறான். நம்மீது அவனுக்கு நம்பிக்கைஇல்லை வைதாலும் திருந்துவதில்லை. அவன் துன்பப்பட்டு உணர்ந்து அவனாகவே திருந்தவேண்டும் என்று விட்டுவிட்டேன் என்கிறார்.

இதைத்தான் இறைவனும் செய்கிறான். கடவுளை நம்புகிற நல்லவர்கள் சிறுதீவினை செய்தாலும் அத்தீவினைகள் விரைவில் அழியுமாறு உடனுக்குடன் அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்து நன்னெறியில் செலுத்துகிறான். கடவுள் கொள்கையற்ற பொல்லார் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நடந்து தன்மனம் போனவாறு நடந்து செல்வமே உயிர்என்று நம்பி தீமைபுரிந்து வாழ்கிறார்கள். இறைவன் சிறுசிறு துன்பங்கள் கொடுத்தாலும் திருந்துவதில்லை. தீமைகள் நிறையச் செய்வதால் உடனுக்குடன் திருத்தல் பயனில்லாமல் போய்விடுகிறது. அவர்களைப் பல பிறப்புக்களில் திருந்துகிறார். அதுநமக்குப் புரியவில்லை. நல்லவர்களை இப்பிறப்பிலேயே திருந்துவிடுகிறார்.

**தெய்வம் உளதென்பார் தீய செயப்புகின்**
**தெய்வமே கண்ணின்று நின்றெறுக்கும் — தெய்வம்**
**இலதென்பார்க்(கு) இல்லைத்தம் இன்புதல்வர்க் கன்றே**
**பலகாலும் சொல்வார் பயன்.**

**நீதிநெறி விளக்கம். 74**

# மணிக்குடி ஸ்ரீ பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில் மண்டலாபிஷேக விழா

திருவிடைமருதூர் வட்டம் மணிக்குடி ஸ்ரீ பிருகந்நாயகி உடனுறை ஸ்ரீ பஞ்சவர்ணேசுவரர் திருக்கோயில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் மிக்க விமரிசையாக 12-7-87 அன்று நடைபெற்றது. அதையொட்டி 25-9-87 அன்று மண்டலாபிஷேக விழா மிக விமரிசையாக நடைபெற்றது. இத்தெய்வப்பெருவிழாக்களுக்குத் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் உடன் எழுந்தருளினார்கள்.

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் முன்னாள் மாணக்கரும், பெங்களூர் ஸ்ரீ வெங்கடேசா கல்வி நிறுவனங்களின் நிறுவனர், செயலர், தாளாளரும் ஆகிய செந்தமிழ்ச் செல்வர், கல்விக்காவலர் வித்துவான். டாக்டர் திரு. ம. வெ. ஜெயராமன் எம். ஏ, டி. லிட்., அவர்கள் தாம் இளமையில் இந்தக் கோயிலில் மிகுந்த பக்தியுடன் நாடோறும் வழிபாடாற்றி வந்தமையால் தாம் பிறந்த ஊரிலுள்ள இக்கோயிலின் பொலிவும் புனிதமும் மிகுமாறு புதுப்பித்தும், புதிதாக நவக்கிரகப் பிரதிஷ்டை செய்வித்தும் பெரும் பொருட்செலவில் கும்பாபிஷேக, மண்டலாபிஷேக, வைபவங்களை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மண்டலாபிஷேக விழாவில் இவ்விழாக்களின் வரலாறு அமைந்த கல்லெழுத்து, ஸ்ரீலஸ்ரீ குருமகாசன்னிதானம் அவர்களால் இத்திருக்கோயிலில் திறந்து வைக்கப்பெற்றது. இக்கல்வெட்டு திரு. கா. ம. வேங்கடராமையா அவர்களால் அமைக்கப்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசன்னிதானம் அவர்கட்கும் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கட்கும் செந்தமிழ்ச்

செல்வர் பக்திசிரத்தையுடன் வரவேற்பு மரியாதைகள் செய்த காட்சி அடியார்கட்கு ஆனந்தத்தை அளித்தது. தம் ஆசிரியர் செந்தமிழ்க் கலாநிதி திரு. கா. ம. வேங்கடராமையா அவர்கட்கும், தம்முடன் தமிழ்பயின்ற புலவர் பெருமக்கட்கும் பொன்னாடை பட்டாடைகள் அணிவித்துப் பெருமைப்படுத்தினார்கள்.

பஞ்சவர்ணப் பெருமான் வானமுதம் பொழிந்து மன்னுயிர்களை மகிழ்வித்த அப்பொன்னாளில் திருச்சி திரு. ஏ. கே. சி. நடராஜன் குழுவினர் கிளாரிநட் இசையாகிய கானமுதம் பொழிந்து செவியும் சிந்தையும் தித்திக்கச் செய்தார்கள்.

மணிவிழாக் கொள்ள இருக்கும் செந்தமிழ்ச் செல்வர் கல்விக் காவலர் டாக்டர் திரு. ம. வெ. ஜெயராமன் எம். ஏ., டி.லிட்., அவர்கட்கும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. ராஜலட்சுமி அவர்கட்கும் ஸ்ரீ பிரகந்நாயகி, ஸ்ரீ பஞ்சவர்ணேஸ்வரர் சன்னதியில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசன்னிதானம் அவர்களும் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களும் பொன்னாடைகள் அணிவித்து, அணிவிக்கச் செய்து பாராட்டியமை மணிவிழா நிகழ்ச்களின் தொடக்கமாகவும் பொருத்தமாகவும் அன்பர்கட்கு மகிழ்ச்சியையும் நிறைவையும் நல்கியது.

— ம. வே. பசுபதி

# நகை

ம. வே. பசுபதி.

'பெண் சிரித்தால் போச்சு, புகையிலை விரித்தால் போச்சு' என்பது மிகப்பிரசித்தி பெற்ற பழமொழியாகும். புகையிலையை விரித்து வைத்தால் காரம் போகும்; பெண்கள் சிரித்தால் மானம் போகும். அப்படியென்றால் பெண் உம்மணாமூஞ்சாகவே இருக்க வேண்டுமா? இல்லை! அந்தப்பழமொழி அப்படிச் சொல்லவில்லை! புகையிலை போடுபவர்களுக்கு இந்தப் பழமொழியின் ரகசியம் புரியும்; புகையிலைப் பொட்டலத்தைத் திறந்து கொஞ்சம் எடுத்துக் கொண்டு பொட்டலத்தை மடித்து வைத்த பிறகுதான் எடுத்துக் கொண்ட புகையிலையை அண்ணாந்து வாயில் போட்டுக் கொண்டு ஆனந்திப்பார்கள். நீண்டநேரம் அதை பிரித்து வைக்கக் கூடாது. பிரிக்கவே கூடாது என்பதில்லை. அதே போலத்தான் பெண் முறுவல் செயய வேண்டும். அவள் அவுட்டுச் சிரிப்புச் சிரித்தால் மென்மை அழகு பறிபோய்விடும். அவள் அழகு மானபங்கப் பட்டு விடும். அதைத்தான் அந்தப்பழமொழி அறிவிக்கிறது.

உலகத்தில் நாம் அடையும் நகைச்சுவைக்கும் இலக்கிய நகைச் சுவைக்கும் நிறைந்த வித்யாசங்கள் உள்ளன.

நான்கு விதங்களின் நகைச்சுவை வரும் என்பான் தொல் காப்பியன். கேலி செய்வதனால் நகைச்சுவை வரும். அதை எள்ளல் நகை என்பர். ஒரு காரணமும் இல்லாமல் இளசுகள் கிளுகிளுக்கும். அதற்கு இளமை நகை ஏன்று பெயர். அறிவு மறந்து ஒரு செயலைச் செய்யக் கண்டால் சிரிப்பு வரும். அதற்குப் பேதைமை நகை என்று பெயர். முட்டாள் தனமான காரியம் கண்டால் சிரிப்பு வரும். அதற்கு மடைமை நகை என்று பெயர்.

ஆரியன் தமிழ் பேசுவது போல, வேற்று நாட்டுக்காரன் தமிழ் பேசுவது போலப் பேசிக்காட்டி எள்ளல் நகையை உண்டாக்கலாம். கிசுகிசுக்கள் சொன்னால் இளமை நகை வரும்; இது பெரியவர்கட்கு எரிச்சலாக இருக்கும். பம்பாய் உ. பி. யின் தலைநகரம் என்று

படித்தவன் சொன்னால் சிரிப்பு வரும். பேதைமை அது. பரமார்த்த குருவின் சிஷ்யன் பூசனிக்காயைப் பார்த்துக் குதிரையின் முட்டை என்கிறான். அவன் செய்த சிரிப்பு மடைமை.

அறிந்தவனின் சிறுதவறுதல் பேதைமை. அறியாதவனின் குற்றம் மடைமை.

உலகியலில் இந்த வகைகளில் சிரிப்பு மூட்டினால் உடனே சிரிப்பு வரும். ஆனால் தொடர்ந்து பலமுறை சொன்னால் சிரிப்பு வராது. குட்டிக் கதைகள் வெட்டிக்கதைகளாய் வெறுப்பை மூட்டும்.

இதே வகைகளில் இலக்கியங்களில் நகைச்சுவை வரும். படித்தவுடன் அவை சிரிக்கச் செய்வதில்லை. பலமுறை படித்த பிறகே அங்கே நகைச்சுவை இருக்கிற விஷயமே புரியும். அப்படிப் புரிந்து கொண்டு ஒருமுறை சிரித்து விட்டோமென்றால், ஜென்மத்துக்கும் அந்த இடத்தைப் படிக்கும் போதெல்லாம், ஏன் நினைக்கும் போதெல்லாம் கூட, சிரிப்புப் பிறிட்டு வரும்.

சிறையிருக்கும் சீதா பிராட்டியிடம் திரிசடை தான் கண்ட கனவைப்பற்றிச் சொல்லுகிறாள். தலையில் எண்ணெய் வழிவது போல இராவணன் வருகிறானாம். எண்ணெய்த் தலையுடன் யார் காட்சி கொடுக்கிறார்களா காட்சி கொடுத்தவர்கள் செத்துப் போவார்கள் என்பது கனவு சாஸ்திரம். அது மட்டுமல்ல; இராவணனின் அரண்மனையிலிருந்து வீடணனின் இல்லிற்கு விளக்கு ஒன்று புறப்படுகிறது. 'இதன் தொடர்ச்சியை முற்றிலுமாக நான் காணவில்லை' அப்பொழுது நீ என்னை எழுப்பி விட்டாய் என்கிறாள் திரிசடை. உடனே சற்றும் யோசிக்காமல் திரும்பப் படுத்துக்கொள்; தூங்கு; அதன் தொடர்ச்சியைக் கண்டு விழித்து எனக்குச்சொல் என்கிறாள் சீதை. நமக்குச் சிரிப்பு வருகிறது. கனவு என்ன வீடியோவா? பாதியில் நிறுத்தி விட்டு, விட்ட தொடர்ச்சியை மீண்டும் பார்க்க முடியுமா என்ன? அறியாதவளல்ல சீதை. அது பேதைமை. வெறும் பேதைமையாக இருந்தால் 'குபீர்ச் சிரிப்பு' வரும். அது ஆதங்கத்துடன் கூடிய பேதைமை. அவலத்தின் உச்சியில் விளைந்த பேதைமை! அதனால் நாமும் அதைப் படிக்கும் போது அழுது கொண்டே சிரிக்கிறோம்.

"அன்னையே அதன்குறை காண்' என்று ஆயிழை
'இன்னமும் துயில்க' என இருகை கூப்பினாள்!"

என்ற கவிச்சக்ரவர்த்தி கம்பனின் தொடரை முதன் முறை படிக்கும் பொழுது இங்கே நகைச்சுவை இருக்கிறது என்று அடையாளம் கூட கண்டு கொள்ள முடியாது! போகப்போகத் தெரியும்!

தமிழ் இலக்கியங்களில் எண்ணற்ற நகைச்சுவைகள் உள்ளன. தண்டியலங்காரம் என்ற நூலின் ஆசிரியர் தண்டியார் மெய்ப் பாடுகளில் 'நகை' என்பதற்கு அதியற்புதமான ஓர் உதாரணம் கொடுத்திருக்கிறுர்! பலமுறை படித்த பிறகு அந்த நகைச்சுவை உள்ளத்தை இனிக்க இனிக்க ஆக்ரமித்துக் கொள்ளுகிறது.

தலைவனுக்கு ஒரு சின்ன வீடு. அங்கே 15 தினங்கள் தங்கி இருந்தான். வீட்டுக்குத் திரும்பிவர ஆசை வந்தது. ஆசையுடனே அச்சமும் வந்தது. வீட்டுக்குள் நுழையும் போதே பறக்குந் தட்டுக்கள் .வரவேற்புச் செய்தால் அவமானமாகி விடுமே என்று அவனுக்குப் பயம்! தன் காமக் கிழத்தியின் சகோதரன் ஒரு பாணன். அவனை அழைக்கிறுன். 'என் வீட்டுக்குப் போய் அவள் கோபத்தைத் தணிக்க வேண்டும். நிலவரத்தைத் தெரிந்து கொண்டு வரவேண்டும்' என்று உத்தரவிடுகிறுன்.

தலைவியின் வீட்டுக்குப் பாணன் வந்தான். 'அம்மா' என்று கூவினுன். அம்மாபெரும் பத்தினி வந்தாள். பாணனை அவளுக்குத் தெரியும்!

'என்ன செய்தி .........?

'ஐயா வீட்டுக்கு வரவேண்டும் என்று விரும்புகிறுர்

'வரட்டுமே'

'வந்து ......'

'வந்து என்ன வந்து ...... அவர் வீட்டுக்கு அவர் வருவதற்கு வெட்கமாக இருக்கிறதா?'

'............'

'யேய்! பாணு! திருட்டுப் பயல் என்ன செய்வான் தெரியுமா? வீட்டிற்கு வாசல் வழியாக வரமாட்டான் சுவற்றைத் துளைத்துக் கொண்டுதான் வருவான்'

'எனக்குத் தெரியாது'

'ஏன் தெரியாது. நடப்பதே அது தானே. சுவற்றைத் துளைத்த திருடன் பானையிலே கயிறைச் சுற்றி, தலைபோல முதலில் நுழைப்பான். வீட்டுக்குள்ளே யாராவது இருந்தால் அதைத் தலை என்று நினைத்துத் தடியால் அடிப்பார்கள். பானை உடையும். அந்தப் பக்கத்திலிருக்கும் திருடன் ஓடிப் போய் விடுவான்'

'இதை ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்?

'திருடன் முதலில் விடுவானே பானைத் தலை, அது நீ தான். அதற்காகத்தான் சொன்னேன்'

பாணனுக்கு எல்லாமே விளங்கி விட்டது. "இவள் மகா புத்திசாலி. இவளிடம் நம் 'அகாசுகா' வேலைகள் பலிக்காது. பொய்த்தலையை விட்டுவிட்டு உண்மைத்தலை வரட்டும்; ஒரு கை பார்க்கிறேன் என்பது இவள் பேச்சின் குறிப்பு" என்று மனதுக்குள் நினைத்தான். அவன் தலைவியை மிரட்டிப் பணியவைக்கச் சும்மாவாவது ஒரு பயங்கரப் போராட்ட அறிவிப்புச் செய்ய வேண்டும் என்று கருதுகிறான்! இந்த அறிவிப்பைக் கேட்டதும் அவள் பயந்து நடுங்குவாள். பயம் ஆக்ரமித்துக் கொண்டால் கோபம் இருக்குமிடம் தெரியாமல் போய்விடும். இந்த அறிவிப்புச் செய்வதுதான் உத்தமம் என்று முடிவுகட்டுகிறான்.

"அக்கா! நானென்ன மக்கா? என்னைப் பொய்த்தலை என்றீர்கள். அப்படியென்றால் உண்மைத் திருடனின் தலை தலைவனின் தலை. அவன் வரும்போது தாக்குவேன் என்பது தானே உங்கள் பேச்சின் அர்த்தம். நீங்கள் தலைவனை அன்புடன் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அதற்காக உங்கள் வீட்டு வாசலிலேயே தீக்குளிக்கப் போகிறேன்!"

—பாணன் பயங்கர அறிவிப்புச் செய்துவிட்டுத் தலைவியின் முகத்தைப் பார்த்தான்.

'தோழி இங்கே வா'

வீட்டிற்குள் இருந்து தோழி வருகிறாள்.

'இதோ நிற்கிறனே இவன் பாணன். இவன் ஆண். வார்த்தை தவறாதவன். ரோஷக்காரன். இவன் இப்பொழுது நிச்சயமாக சத்தியமாக - சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக நம் வீட்டு வாசலில் தீக்குளிக்கப் போகிறன். இதைப் போன்ற நிகழ்ச்சிகளை நேரில் பார்ப்பது முடியாது. நாமிருவரும் இப்பொழுது பார்க்கப் போகிறோம்!'

சலனமில்லாமல் இந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டுப் பாணனைப் பார்த்தாள்.

''நாண்போலும் தன்மனைக்குத் தான்சேரல் இங்நின்ற
பாண்போலும் வெவ்வழலில் பாய்வதுவும் — காண்தோழி
கைத்தலம் கண்ணுக் களவுகாண் பாணொருவன்
பொய்த்தலைமுன் னீட்டியற்றும் போழ்ந்து''

என்ற பாடலில் வரும் எள்ளல் நகைச்சுவை மிகுந்த சுவாரஸ்யமானது.

சில நேரங்களில் உலகில் இதுநடை பெறுவதுதான். இரண்டுபேர் கடுமையாக வாய்ச்சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். அது முற்றிப்போய்க் கைகலக்கத் தொடங்கும் நேரத்தில் வடக்கே ஒருவனையும் தெற்கே ஒருவனையுமாக வேடிக்கை பார்த்தவர்கள் இழுத்துக்கொண்டு போவர். சண்டைக்காரர்கள் இழுக்க இழுக்க எகிறிஎகிறிக் குதிப்பார்கள். 'டக்' கென்று விட்டு விட்டால் அவர்கள் முகத்தைப் பார்க்கச் சகிக்காது. பாணனின் முகமும் அப்படித்தான் இருந்திருக்கும்.

பாணனைக் கிண்டல் செய்து நகைச்சுவை உண்டாக்குவதில் இலக்கியத் தலைவிகளுக்கு அலாதி ஆனந்தம்!

நந்திக் கலம்பகம் என்பது அதியற்புதமான வரலாற்று இலக்கியம். தெள்ளாறு எரிந்த நந்தித்தொண்டைமானைப் பற்றி ஏதோ ஒரு புலவர் பாடியது. பாடியவர்தெரியாத ஒரே பாவத்திற்காக 'இது அரசனைக் கொல்வதற்காக அரம் வைத்துப் பாடப்பெற்றது' என்ற புருடாக்கதைகள் ஒரு பக்கம். 'நந்திக் கலம்பகத்தில் நச்செழுத்துக்கள் அதிகம்' என்று ஒரு ஜோஸ்யம். அந்த எழுத்துக்கள். அந்த அளவு உள்ள வேறு நூல்களும் உள்ளன. கதைக்காக எழுதும் வரலாற்று நவீன ஆசிரியர்கள் அப்படிச் சொல்வதை மனப்பூர்வமாக வரவேற்போம். வரலாற்றுக் கதைகளில் வரலாறு

கால்பங்கும் கதை (புனைந்துரை) முக்காற் பங்கும் இருந்தால் ருசி சரியாக இருக்கும்! வரலாறு அதிகமாக அதிகமாக ருசி குறையத் தொடங்கி விடும்!

நந்திக் கலம்பகத்தில் சில பாடல்கள் கவர்பொருட்பேறு என்ற குற்றமுள்ளவை. 'கந்தனுக்கு முன்பிறந்தான்' என்று விநாயகரை ஒருவன் சொன்னால் அது கவர்பொருட்பேறு என்ற குற்றம். அந்தத் தொடரைக் 'கந்தனுக்கு முன்பு இறந்தான்' என்றும் பிரிக்கலாம். இதைத்தான் கவர்பொருட்பேறு என்பர். கவர்த்தல் என்பதற்கு இதுவோ அதுவோ என்று சந்தேகப்பட வைப்பது என்பது பொருள். கந்தனுக்கு முன்பு இறந்தவனா கந்தனுக்கு முன் பிறந்தவனா என்று சந்தேகப்படவைக்கிறது இந்தத்தொடர். எனவே கவர்பொருட்பேறு என்ற குற்றம் உடையது.

"வானுறு மதியை அடைந்ததுன் வதனம்"

என்ற பாடல் முழுவதும் இப்படிப்பட்ட குற்றம் உடைய பாடலாகும். அப்படிப்பட்ட பாடல்களை வேண்டாமென்றால் டி. கே. சி. யின் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தூக்கி எறிந்துவிட வேண்டும் அல்லது இருந்துவிட்டுப் போகட்டுமே, யாருக்கென்ன நஷ்டம் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்! டி. கே. சி. யின் பாணி துணிச்சலானது. ஆனால் சிலர் சில புத்தகங்களையே தமிழுக்கு இது தேவையில்லை என்கிறார்கள் அதைத் 'துணிச்சல்' என்ற நல்ல வார்த்தையினால் சொல்ல முடியாது.

தண்டியலங்காரத்தில் வந்ததைப்போல நந்திக் கலம்பகத்திலும் தலைவி பாணனைக் கேலி செய்து சிரிப்பை உண்டாக்குகிறாள்! தண்டியலங்காரத்தில் வந்த தலைவியைக் காட்டிலும் இவள் மிகுந்த சமர்த்தியக்காரி. பாணன் எந்த வியவகாரத்துக்காக வந்தானோ அதை அவன் சொல்வதற்கே விடவில்லை.

பாணன் தலைவனின் வேண்டுகோளின்படி தலைவியின் வீட்டுக்கு வருகிறான். தலைவியை அழைத்துப் பேச்சுக் கொடுக்க வேண்டும்; ஒருவேளை அவள் கோபமாக இருந்தால் நியாயங்களைச் சொல்லிச் சமாதானம் ஏற்படுத்த வேண்டும். இதுவே அவன் லட்சியம்.

பாணன் தலைவியின் வீட்டுவாசற் படியை மிதித்தவுடனேயே அவனுக்கு அமோக வரவேற்பு. தலைவி, தலைவியை வளர்த்த தாய்,

தோழி, இன்னும் யார் யாரோ சில பெண்கள் எல்லாரும் ஓரிடத்தில் இருந்தார்கள்.

தலைவி மட்டும்தான் பேசினாள். பாணனைப் பேசவிட வில்லை!

'பாண! நீ மிகவும் பிரசித்தி பெற்றவன்; பிரபலமானவன்; புகழ் உள்ளவன்'

தலைவியின் புகழுரையைக் கேட்ட உடனே பாணனுக்குத் தலைகால் புரியவில்லை. ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்ச்சி; ஏனென்றால் அவன் கோபக்கனலையும் வசையம்புகளையும் எதிர்பார்த்து வந்தவன். இங்கே பலமான வரவேற்பு. தொடர்ந்து தலைவியே பேசினாள். "புகழ் பொருந்திய பாணனே! என்னுடைய தங்கை ... ஆம் உன் சகோதரி வீட்டில் நேற்று இரவு பெரிய கச்சேரி நடந்ததல்லவா? தலைவன் ரசிப்பதற்காக. இல்லையா?"

'ஆமாம் அக்கா'

'நான் சொன்னது தான் சரி. விடிய விடியப் பாடினாய். இவர்களுக்கு உன் அருமை என்ன தெரியும்? விடிய விடிய வந்த அந்தச் சத்தம் என்ன என்பதைப்பற்றி ராத்திரி இங்கு, பெரிய சர்ச்சையே வந்துவிட்டது. பேயின் சத்தம் என்று தாய் சொன்னாள். நான் 'இல்லை' என்றேன். மற்ற பெண்களெல்லாம் நரி ஊளையிடுகிறது! என்றார்கள். 'அதுவும் இல்லை' என்றேன். என் உயிர்த்தோழி 'நாய்ச் சத்தம்' என்று ஒரேயடியாக வற்புறுத்தினாள். நான்தான் சரியாகச் சொன்னேன் 'நீ பாடிக்கொண்டிருக்கிறாய்' என்று,

**ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்**
**வீட்டிருந்து பாட விடிவளவும் — காட்டிலமும்**
**பேயென்றாள் அன்னை பிறர்நரிஎன் றார்தோழி**
**நாயென்றாள் நீ யென்றேன் நான்**

[ஈட்டு - சேகரித்த; எங்கை — தங்கை எங்கையர் எனப் பன்மையாகக் குறித்தமையால் பரத்தை இல்லில் இருந்த பலரும் தலைவருக்கு ஆட்பட்டிருந்ததாகத் தலைவி கருதியமை பெறப்படுகிறது.]

இந்த வசனம் முடிவதற்குள் பாணன் புறப்பட்டுப் போயே போயிருப்பான்!

இலக்கியத் தலைவியின் நகைச் சுவைஉணர்வு இனிக்கிறது.

# நூல் நிறை

## மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ் மாலை

*மாலை—21*

[ உரையாசிரியர்: ஆங்கிரஸ. எஸ். வெங்கடேச சர்மர். பக்கங்கள்: 80. விலை ரூ 4. கிடைக்குமிடம் 5 டெலிபோஸ்ட் காலனி குறுக்குத்தெரு, மேலமாம்பலம், சென்னை 600 033 ]

திரு. வெங்கடேச சர்மா அவர்கள் தேவாரப் பனுவல்களுக்குத் தொடர்ச்சியாக உரை நூல்கள் வெளியிட்டு வருதலைத் தமிழுலகம் நன்கறியும். அவ்வகையில் 21 ஆவது வெளியீடாக இது வந்துள்ளது. திருவியலூர், திருந்து தேவன்குடி, திருஇன்னம்பர், திருவடகுரங் காடுதுறை, திருப்பழனம், திருவையாறு (2) ஆகிய தலங்களின் ஏழு பதிகங்கட்கு இந்நூலில் உரை விளக்கங்கள் உள்ளன.

தலவிசேடங்கள் தனியே தரப்பெற்றுள்ளன. பொழிப்புரை யுடன் பிறவுரைகளின் குறிப்புக்கள், இலக்கிய மேற்கோள்கள், வடமொழி வழக்கு, தொகைக் குறிப்பு விளக்கம் ஆகியன அடங்கிய விளக்கவுரையை ஒவ்வொரு பாடலுக்கும் எழுதியிருக் கிறார். இவ்வகையில் விளக்கவுரை அரியதோர் ஆய்வுரையாகவே அமைகிறது.

20, 21, 22 ஆகிய மூன்று தமிழ் மாலைகட்கான முழுச்செலவு களையும் பெரும் பொருட்கொடையாக வழங்கியவர்கள் செந்தமிழ்ச் செல்வர், கல்விக்காவலர், வித்துவான் டாக்டர் திரு. ம. வெ. ஜெயராமன் எம். ஏ., டிலிட், அவர்கள் ஆவர். அவர்களின் உருவப்படம் நூலை அலங்கரிக்கிறது.

—ம. வே. பசுபதி.

# தாயுமானவர் - இராமலிங்கர் ஒன்றிய உணர்வு

வே. சீதாலட்சுமி, எம். ஏ., பி. எட்.

"கவிதை தனித்த மனிதனின் சொல்லன்று: சமுதாயத்தின் விளைவு" என்னும் அறிஞர் தம் ஆன்ற கருத்திற்கேற்ப அரன் தாள் வணங்கி அவனியிலே அரும் பெருஞ்சோதியின் ஆற்றலை, அருளை அளவிலா உயிர்களை உள்ளடக்கிய ஆனந்தமூர்த்தியின் கீர்த்திகளை அவனருளால் அவன்தாள் வணங்கும் அடியாருக்கு அள்ளித் தந்தவர்கள் தாயுமானவரும், இராமலிங்க அடிகளாரும் இருவரும் 18-ம் நூற்றாண்டு பக்திக் கவிஞர்கள் புறச்சமயக் காழ்ப்புக் காலத்தில் வாழ்ந்தவர்கள், வள்ளலார் தத்துவத்தைச் சொல்லுவதில் பழைய மரபுகளையே பின்பற்றி வந்தவர்.

யாண்டும் நீக்கமற நிறைந்த 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருந் தகையின் தன்மையைக் கூறி ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு நம்மையும் அழைக்கிறார் அடிகளார் வள்ளலாரோ 'புனைந்துரையேன், பொய் புகலேன் சத்தியம் சொல்கின்றேன் வம்மின் உலகீரே' என்று ஊனுருகி நெக்குருகி அழைக்கின்றார் நம்மை. கண்ணியும், மாலையும் கன்னித் தமிழில் கவின் பெறப்புனையப் பெற்று 'பக்தியின் மொழி தமிழ்' எனப் பறைசாற்றுகின்றது.

**ஒன்றிய உணர்வுக்கான சான்றுகள் :**

இருவரும் ஆனமநேய ஒருமைப்பாட்டையே கூறுகின்றனர். இறைவன் இயல்பை தாம் உணர்ந்த வகையில் உண்மையுடன் தருகின்றனர். இறையோடு, உள்ளங்கலந்த நிலையில் அவனோடு ஒன்றும் ஒருமைப்பாட்டையே வேண்டுகின்றனர்.

தாயுமானவர்,

"சுத்த அறிவாம் சுகம் பொருந்தின் அல்லாலென்
சிந்தை அறியேன் உன் சித்தம் பராபரமே"

என்று பேரின்ப நாட்டமிகுதியை, ஒருமைப்பாட்டுணர்வை உலகோர் உணரும் வண்ணம் கூறுகின்றார்.

இராமலிங்க அடிகளாரும்,

"இம்மையிலே எம்மையினும் காணுச்சுத்த
இன்பநிலை அடைவேனோ"

என்று ஒன்றிய உணர்வுக்கான ஏங்கும் நெஞ்சைக்காட்டுகிறார்.

"எனையறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட
என்னரைசே என்குருவே இறையே"

என்று உளம் புகுந்த உத்தமனைப் போற்றுகின்றார்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று மண்ணுயிர்க்குத் தொண்டு செய்யின் விண்ணுறையும் இறைவனுக்கு அன்பு செய்யும் பேறுகிட்டும் என்று போற்றுகின்றனர்.

தாயுமானவர்,

"அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானாக வந்தெய்தும் பராபரமே" என்றும்,

வள்ளலார்,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்

என்றும் தங்கள் தொண்டுள்ளத்தை உலகுக்கு உணர்த்துகின்றனர்.

3. இவரது நெறியும் எல்லாச் சமயங்கட்கும் பொருந்தக்கூடிய சன்மார்க்க பெருநெறியாகும். சமரச உணர்வை வளர்த்தவர்கள். தாயுமானவர் சமரச ஞானத்தின் பாதுகாவலர்,

"Man does not live by bread but by
every word of God"

என்பது மேனாட்டார் கூற்று.

தாயுமானவர்,

"பார்க்கின் அண்டபிண்ட மனைத்திலும் இருப்பவனே" என்கிறார்.

இரமலிங்க அடிகளாரும்,

" பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய் பொங்கிஓங்கும்
கங்கு கரை காணாத கடலே "

ஒன்று சமரச சன்மார்க்க நெறியைக் கூறுகின்றார்.

4. கடுந்தவமிருந்து கடவுளைக் காண்பதரிது என்றும் திருவாசகத் தீந்தமிழ் வாசகம் இருவர்தம் பாடலிலும் உள்ளது. இறைவன் அடியார்க்கு எளியவன். இக்கருத்தை இருவரும் போற்றுகின்றனர்.

" கடுந்தவித்தும் காண்பதரிதாங் "

" விரைந்து அன்பர் உள்ளத் தேசென்ற
பெருங்கருணைப் பெருவாழ்வே "

என்கிறார் இராமலிங்க அடிகளார்.

" ஆரறிவார் என்ன அனந்த மறை ஓலமிடும்
பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே "

" உரையிறந்த அன்பர் உள்ளத்து ஓங்கொளியாய் ஓங்கி
கரையிறந்த இன்பக்கடலே பராபரமே "

என்று கூறுகிறார் தாயுமானவர்.

5. கொல்லா விரதத்தைத் தொடங்கியவர் தாயுமானவர் அதனை நிலைநிறுத்தியவர் வள்ளலார்.

" கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவது என்இச்சை பராபரமே "

என்பது தாயுமானார் கூற்று.

6. சமயங்களும் தத்துவங்களுமாக இருப்பவன் இறைவன் என்ற ஒன்றிய உணர்வுடையார் தாயுமானவரும், வள்ளலாரும்.

இராமலிங்க அடிகளார்,

" வேதாந்த நிலையாகி சித்தாந்தத்தின்
மெய்யாகி சமரசத்தின் விவேகமாகி "

என்று போற்றுகின்றார்.

" முத்தாந்த வீதி முளரி தொழும் அன்பர்க்குச்
சித்தாந்த மார்க்க சிறப்பே பராபரமே "

எனப் போற்றுகின்றார் தாயுமானவர்.

7. இருவர் பாடலிலும் உருக்க மிகுதி உண்டு. "ஒரு கவிதையில் கவிஞனின் ஆன்மாவைக் காண்கின்றோம்" என்பது அறிஞரின் கருத்து. இதனை,

" ... ... ... நின்னடிச் சீருன்னியன்பர்
வானேறுகின்றார் நானொருவன் பாவி
மண்ணேறி மயக்கேறி வருந்துற்றேனே "

என இறையன் புக்காக ஏங்கும் நெஞ்சைச்சுட்டுகிறார்.

தாயுமானவர்,

" அன்பரெல்லாம் இன்பம் அறிந்திடவும் யானொருவன்
துன்புறுதல் நன்றோ - நீ சொல்லாய் பராபரமே "

எனத் தம் உருகும் நெஞ்சை விவரிக்கின்றார்.

8. இறைவனின் உயர்ந்த நிலையினையும், இறைவனைக் கருணைகரனாகவும், இன்பநிலை வளர்க்கும் நிலையுடையவனாகவும், மறைபொருளாகவும், மனத்தும் கசிந்துருகும் வடிவத்தனாகவும் சிறப்பிக்கிறார்கள். அடிகள் இதனை,

" கருணை நிறைந்து அகம்புறம் துளும்பி
வழிந்து உயிர்க்கெலாம் களைகணாகித்
தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய் ! பொய்ய னேன்றன்
மருள் நிறைந்த மனக்கருங் கற்பாறையும்உட்
கசிந்து உருகும் வடிவத்தோயே "

என்ற வரிகளில் சுட்டியுள்ளார். தாயுமானவரும் இறைவனைக் 'கருணைமழையே' 'ஆனந்தவெள்ளப் பேராறே' 'மோனப் பெருக்கே' 'கரையிறந்த இன்பக்கடலே' என்று கற்பனை செய்கிறார்.

9. இறைவனோடு கலந்த நிலையைத் தேனாகவும், கனியின் சுவையாகவும் உருவகிப்பது அடியார் மரபு. இதனை,

வள்ளலார்,

"தேனாகித் தேனினுஞ் சுவையதாகித் தீஞ்சுவையின் பயனாகித்"

என்று உருவகிக்கின்றார்.

தாயுமானவர்.

" கன்னல் தரும் பாகாய் கருப்புவட்டாய்க் கற்கண்டாய்
இன்னமுதாய் என்னுள் இருந்தாய் பராபரமே "

எனக் கூறுகிறார். இதனையே சொல்லுக்குறுதி அப்பரும்,

' கனியினும் கட்டிப்பட்ட கரும்பினும் "

என்று சுவைபடக் கூறுகின்றார்.

10. இறைவனுக்கு உருவம் கிடையாது. அருவமே அவன். என்று இருவரும் ஒன்றிய உணர்வுடையவராகவே உள்ளனர். தாயுமானவர்,

" ஒன்றே பலவே உருவே அருவேயா
என்றே அழைப்பது உன்னை என்றோ பராபரமே "

என்றும், வள்ளலார்,

" உருவாகி உருவினில் உள் உருவமாகி
உருவத்தில் உருவாகி உருவுள் ஒன்றாய்
அருவாகி அருவினில் உள் அருவமாகி
அருவமாகி அருவாகி அருவுள் ஒன்றாய் "

என்று பாடுகின்றார். இதனையே வாதவூரடிகளும்.

" சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரியே
ஆதியே, நடுவே, அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே "

எனப் பொருள் நயம்பட புகல்கின்றார் நீரு நின்றுனின் நிலைபெற்ற புகழுருவினை.

11. எல்லாமாக இருப்பவன் இறைவன். தாயுமானவர்,

> " மாயைமுதலாம் வினை நீ மண்ணுயிர்நீ மண்ணுயுர் தேர்ந்து
> ஆயும் அறிவானது நீயன்றோ பராபரமே "

என்றும், வள்ளலார்,

> " வித்தாகி முளையாகி விளைவதாகி
> விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
> கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக்
> குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
> சத்தாகிச் சித்தாகி இன்பமாகி "

என்று விவரிக்கின்றனர்.

12. இறைவன் யாவற்றையும் கடந்து நிற்பவன் இக்கருத்து இருவருக்கும் உடன் பாடே.

> " ஈறில்லா பதங்கள் யாவையும் கடந்த
> இன்பமே என்னுடை அன்பே "

எனத் தாயுமானவரும்,

> " அளவை யெல்லாம் கடந்து மனங்கடந்து மற்றை
> அறிவையெல்லாங் கடந்து கடந்த மலயோகர்
> உளவை யெல்லாங் கடந்து "

என வள்ளலாரும் போற்றுகின்றனர். மணிவாசகரும் இறைவன் அறிவு, உணர்வு, உரை மூன்றையும் கடந்தவன் என்பதை; "உரையுணர்வு சிறந்து உணர்வதோர் உணர்வு" எனப் போற்றுகின்றார்.

13. இருவரும் பிறவிப் பேரறுத்தலையே நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

தாயுமானவர்,

"என்னைப் புறந்தருளின் கடனும் என் றீடனும்
நின்னிற் பணியரவே நிற்கை பராபரமே"

என்றும் வள்ளலார்,

"இருளுடைய பவக்கடல் விட்டேறேன் என்னை
ஏற்றுதற்கு எண்ணுக என் இன்பத்தேவே.

என்று போற்றுகின்றனர்.

முடிவுரை: மகாதேவ மாலை இறைவனைச் சொல்லும் ஓர் உயிரின் பயணமாகவே உள்ளது. இறைவனை அடைய முயன்ற தம் அனுபவத்தை — இறை நாட்டத்தை இறைவனின் கருணையை மாலையில் காண்கின்றோம். கண்ணி — கண்ணியாக இருக்கிறது: மாலை — மாலையாக மலர்கிறது. கருத்தமைப்பில் ஒற்றுமை. சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்ப, பேச்சுத் தமிழை எளிய தமிழை பயன்படுத்தினர். சொல்லில் அடங்கா இறைவனைச் சொல்லிக்கொண்டு வர முயன்றனர் நம் சமய ஆன்றோர்கள்.


Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
LNo. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

ஸ்ரீ நடராஜ விலாஸ்
ஜுவல்லரி ஹால்
சிதம்பரம்

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள்:

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்
தென்னார்க்காடு மாவட்டம் — 608 001

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

( மாதப் பத்திரிகை )

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தாதாரராகச் சேருங்கள்.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருடச் சந்தா | ரூ. 22 |
| ஆயுள் சந்தா | ரூ. 250 |
| தனிப் பிரதி | ரூ. 2 |

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் தொலைபேசி

ஸ்ரீராமகிருஷ்ண மடம் 71959

மயிலாப்பூர் : சென்னை600 004. 71231

# திருச்சதகமும்

# கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியும்

## அணிநல ஒப்பீடு

ப. பாஸ்கரன் M. A., M. Phil.,

தொடர்ச்சி

மற்றும் இவரே,

"கமலச் சேவடி"
"மலர்ச் சேவடி"
"பங்கயச் சேவடி"
,'புண்டரிக மலர்த்தாள்"
"முண்டகக் கழல்"
"பொன்னடி"

என்றும் பலவாருக எடுத்தியம்பினார்கள். கமலம், பங்கயம் புண்டரிகம், முண்டகம் என்பன தாமரையையே குறிக்கின்றன. எனவே தொன்றுதொட்டு வந்த மரபுப்படி திருவடிக்குத் தாமரையை உவமையாகக் காட்டினர். மேலும் பொன்னடி என்ற உவமைத் தொகையினல் திருவடிக்குப் பொன்னையும் உவமை யாக்கிக் காட்டுகிருர்.

சிவபெருமானின் மேனி செந்நிறமாக விளங்குவது. சங்க இலக்கியங்கள் "செவ்வான் அன்ன மேனி" என்று சொல்லிச் செவ்வானத்தை உவமையாகக் கூறும். மாணிக்க வாசகர் தம்மை ஆட்கொள்ள வந்த இறைவன் "செந்தழல் புரை திருமேனியுங் காட்டி" ஆட் கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். நெருப்பைப் போன்ற அத்துணைச் சிவப்பாம். இவரே திருச்சதகத்தில் இறைவன் திருமேனிக்குச் செந்நிறம் பற்றி,

"அரத்த மேனி"
"செச்சைமா மலர்புரையும் மேனி"
"தாமரைக் காடு அனைய மேனி"

என்று மூன்று உவமைகள் கூறுகின்றார். அரத்தம் (குருதி) போல வும், செச்சை (வெட்சிமலர்) மலர் போலவும், தாமரை மலர்க் கூட்டம் போலவும் சிவப்பாக இருந்தது என்கிறார். எனினும் இம் மூன்று சிவப்புள் ஒன்று வேறுபடுகின்றது. அரத்தமும், செச்சை மலரும் அழுத்தமான கரும் சிவப்பு நிறம் உள்ளவை. தாமரை மலர் சற்று வெளிறிய நிறம் உடையது.

மேற்கண்ட மூன்று உவமைகளே அன்றித் திருமேனிக்கு வேறு ஓர் உவமை கூறுகின்றார் மாணிக்கவாசகர். "பொன்னே திகழும் திருமேனி" என்று பொன்னைக் காட்டுகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைக் குறிக்கும் பொழுது "பொன்னார் மேனி யனே" என்று குறிக்கிறார். இங்குக் கூறப்பட்டது பொன்நிறம் பற்றிக் காட்டப்பட்டதாக ஏற்க இயலாது. பொன்னின் நிறம் மஞ்சள். சிவனின் நிறத்தை எவரும் மஞ்சள் என்று குறிப்பிட்ட தேகிடையாது. ஆகவே பொன் போன்ற பளபளப்பு உடைய மேனி என்றே பொருள் கொள்ளல் தகும்.

அதிவீரராமர் சிவபெருமானின் திருமேனி பற்றிக் குறிப்பிடும் போது,

"மேனி வெங்கனல்"
"தீ நிறச் செய்யன்"

எனக் குறித்துள்ளார். இவற்றால் இறைவனின் திருமேனி தீப் போன்ற செந்நிறம் வாய்ந்தது என்பதைக் குறிப்பிட்டுள்ளார். மற்றும் "கருவை வாழும் செழுஞ்சுடரே" என உருவகமாகக் கூறு மிடத்திலும் இறைவன் மேனி நெருப்பின் சுடர் போலச் செந்நிறம் வாய்ந்தது என்பதைக் குறித்து உள்ளார். சிவபெருமானது திரு மேனி மட்டுமல்ல திருவடியும் சிவப்பு என்பதை "மலர்ச் சேவடி" எனவும், வாயும் சிவப்பு என்பதை "செய்ய வாயும்" எனவும், சடையும் சிவப்பு என்பதை "வார்ந்த செஞ்சடைக் கருவை வான வன்" எனவும் "பவளவார் சடை" எனவும் அதிவீரராமர் குறிக்கின்றார் இங்ஙனம் சிவனைச் செந்நிறமாகக் கண்ட அதிவீரராமர் கருவையாதிபனைப் "பால்நிற மேனியன்" எனவும் "கறந்தபால்நிற வண்ணன்" எனவும் குறிப்பிடுகின்றார். பால் போன்ற தூய வெண்மை நிறம் வாய்ந்த திருமேனி உடையவன் என்கிறார். இங்ஙனம் செம்மை எனவும், வெண்மை எனவும் இவர் மயக்கக் கூறுனரோ என எண்ண வேண்டாம். சிவனது இயல்பான நிறம் சிவப்பே. அங்ஙனமாகப் பால்வண்ணம் என்றது

திருக்கருவைக் கோயிலில் உள்ள இலிங்க வடிவின் சிறத்தைக் குறித்ததாகும். எனவே முரண்பாடில்லே.

மணிவாசகர் திருச்சதகத்தில் காட்டிய உவமைகளுள்,
"பள்ளந் தாழுறு புனலில்"
"மத்திடு தயிராகி"
"இருவகை யானையை ஒத்தது"
"கற்றம் அன்தோர் கொள்கை"
"ஊரா மிலேக்க குருட்டா மிலேத்தாங்கு"
"தனியார் மூங்கில் அனேயேன்"

போன்ற உவமைகளே அதிவீரராமர் கையாளவில்லே. அங்ஙனமே திருச்சதகத்துள் வாராத புதிய சில உவமைகளே அதிவீரராமர் கையாண்டு இருக்கிருர்.

செல்வமும், வாழ்க்கையும் நிலேயற்றன என்பதை உணர்த்த வந்த இடத்தில் "மின்னெனே வைகலும் நிலேயற்ற தனத்தை வாழ்வை" எனக் குறிப்பிடுகின்ருர். மின்னல் தோன்றியவுடன் அழிந்து போவதைப் போல் செல்வமும், வாழ்க்கையும் விரைந்து அழியக் கூடியவை என்று அறிவுறுத்துகிருர்.

துன்பத்தின் மிகுதிப்பாட்டைக் குறிப்பிடும் போது "நடுக் கடலுள் கலங்கவிழ்ந்து வெம்புதுயர் மனத்தார் போல்" என்கிருர். இது சுவையும், உணர்ச்சியும் மிக்கதோர் உவமை. அதிவீரராமர் கடல் நடுவே கப்பல் கவிழ்ந்த போது அக்கப்பலில் சென்ருேர் பெருந்துயர் எய்துவார். அதுபோல இறைவனின் அருளே விரும்பி நின்று அது கிடைக்காமையாலே தானும் வருந்து வதாகக் குறிப்பிடுகின்ருர்.

உயிரோடு ஆணவம் முதலிய மலங்கள் என்றும் ஒன்றி நிற் கின்றன. இதற்குச் சாத்திர நூல்கள் செம்பிலே உள்ள களிம்பை உவமையாகக் கூறும். அதிவீரராமயும்,

"ஆன்ற செழுஞ் செம்பிலுறை
களிம்பு போல் அகலாமல்
ஊன்று மலத் துகள்"

என்று உயிரைப் பற்றிய மலத்துக்குச் செம்பில் உள்ள களிம்பையே உவமையாகக் காட்டுகின்ருர்.

பொம்மைகளை ஆட்டுகின்றவன் தான் மறைந்து நின்று ஆட்டுவதைப் போல, உலகில் உள்ள உயிர்களை எல்லாம் இறைவன் மறைந்து நின்று ஆட்டுகின்ருன் என்று சாத்திர நூல்கள் கூறும், அவை கூறுமாறே அதிவீரராமரும் அதே உவமையைப் பயன் படுத்திக் கூறுகின்ருர்.

"... ... ... ... ... மறைந்து நின்று
முட்டுவான் போல
உரக கங்கணக் கருவையான்
ஒருவன் நின் ருட்டாப்
பரவை சூழ்நில மள்பதை
பரப்பெலாம் நடிக்கும்"

திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியில் அதிவீரராமர் பல உவமைகளை எடுத்தாண்டுள்ளார். அவற்றுள்ளே ஐந்து உவமை திருச்சதகத்தில் வந்த உவமைகளோடு முழுதும் ஒத்துள்ளன. சில உண்மைகள் திருச்சதகத்தில் காணப்படாத தனித்தன்மை பெற்றுள்ளன. எனவே இவ்வொப்பீட்டின்படி திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி திருச்சதகத்தை உவமையளவில் சிறுபாண் மையே தழுவி நிற்கிறது எனலாம்.

---

# ஆலயபூஜைப் படிக்காசு நிதி

## நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

| | |
|---|---|
| திரு/திருமதி முன் இருப்பு | 26947—15 |
| அப்பு துர்க்காகுடில் குடந்தை | 5—00 |
| கைலாசம் உக்கரை | 5—00 |
| . ஆறுமுகம்பிள்ளை ஸ்ரீவைகுண்டம். | 26—00 |
| ஆக ரூ | 26983—15 |

| | |
|---|---|
| பாணுதுறை ஸ்ரீ, பாணபுரீஸ்வரர் ஆலய பூஜைக்கு RS ... | 75—00 |
| தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலய பூஜைக்கு. RS ... | 90—00 |
| திருந்து தேவன்குடி கற்கடேஸ்வரர் ஆலய பூஜைக்கு RS ... | 90—00 |
| சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலய பூஜைக்கு RS ... | 70—00 |
| ஆக ரூ | 325— |

# இளங்கலை (இசை) வகுப்பு
# மாணவ மாணவியர் சேர்க்கை

20353

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
கயிலைமா முனிவர்

**ஸ்ரீ லஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள்**

திருவுளப் பாங்கின் வண்ணம், திருப்பனந்தாள்

**கா. வா. சு. செ.** கல்லூரியில்

**15-9-87** அன்று பி.ஏ. **(இசை)** முதலாண்டு தொடங்கப் பெறுகிறது.

பாரதிதாசன் பல்கலைக் கழக அனுமதி பெறப்பட்டுள்ளது.

+2 தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர் யாவரும் சேரலாம்.

உரிய கல்விச் சான்றுகளுடன் நேரில் வந்து சேர்ந்து பயனடைக.

**செயலர்**

**திருப்பனந்தாள்**
**தஞ்சை மாவட்டம்**

**கா. வா. சு. செ. கல்லூரி**

# ஸ்ரீ காசிமடம் வெளியீடுகள்

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

## அருளிய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | கந்தர் கலிவெண்பா (மூலம் மட்டும்) | 0—45 |
| 2 | கந்தர் கலிவெண்பா<br>கு. சுந்தரமூர்த்தி உரையுடன்) | 1—50 |
| 3 | கந்தர் கலிவெண்பா & சகலகலாவல்லிமாலை<br>(பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்) | 1—50 |
| 4 | மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் | 0—50 |
| 5 | நீதிநெறி விளக்கம்<br>(பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்) | 1—50 |
| 6 | நீதிநெறி விளக்கம்<br>(ஆங்கிலம் இந்தி மொழிபெயர்ப்புடன்) | 1—00 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை | 0—50 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை &<br>முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | 1—25 |
| 6 | முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | 0—50 |
| 10 | சிதம்பர மும்மணிக்கோவை, செய்யுட்கோவை,<br>தில்லை சிவகாமி அம்மை இரட்டைமணிமாலை | 1—25 |
| 11 | மதுரைக் கலம்பகம் | 0—40 |
| 12 | காசிக் கலம்பகம் | 0—40 |
| 13 | நீதிநெறி விளக்கமும், நன்னெறியும் | 0—15 |

## சாத்திர நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | திருவுந்தியார் — தெளிவுரையுடன் | 7—50 |
| 2 | திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும்<br>[திரு. க. வெள்ளைவாரணனார் விளக்கத்துடன்] | 3—20 |
| 3 | சிவஞானபோதம் — தெளிவுரையுடன் | 10—00 |
| 4 | இருபா இருபஃது — ” | அச்சில் |
| 5 | உண்மை விளக்கம் — ” | அச்சில் |
| 6 | உண்மை நெறிவிளக்கம் — தெளிவுரையுடன் | 0—75 |

| | | |
|---|---|---|
| 7. | சிவப்பிரகாசம் — தெளிவுரையுடன் | 2—50 |
| 8. | திருவருட் பயன் — ,, | அச்சில் |
| 9. | கொடிக்கவியும் வினாவெண்பாவும் — ,, | 0—75 |
| 10 | போற்றிப்பஃறொடை — ,, | அச்சில் |
| 11. | நெஞ்சு விடுதூது — ,, | 1—50 |
| 12. | சங்கற்ப நிராகரணம் — ,, | 5—00 |

## பன்னிரு திருமுறை

| | | |
|---|---|---|
| 1 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (1,2,3, ஆம் திருமுறைகள்) | அச்சில் |
| 2. | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (4,5,6 ஆம் திருமுறைகள்) | 15—00 |
| 3. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (7 ஆம் திருமுறை) | 7—00 |
| 4. | திருவாசகம் (8 ஆம் திருமுறை) | 10—00 |
| 5. | திருவிசைப்பா - திருப்பல்லாண்டு (9 ஆம் திருமுறை) (தெளிவுரையுடன்) | 7—00 |
| 6. | பெரிய புராணம் (12 ஆம் திருமுறை) | 12—00 |

## புராணங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கந்தபுராணம் மூலம் (மூன்று தொகுதிகள்) | 65—00 |
| 2. | பெரியபுராணம் மூலம் | 12—00 |
| 3. | திருவிளையாடற் புராணம் — உரைநடை மூன்று காண்டம் (4-00, 3-50, 3-50) | 11—00 |
| 4. | திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம் | 0—75 |

## இதர நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | நீதிநெறி விளக்கக் கருத்தரங்கக் கட்டுரைகள் | 3—00 |
| 2. | செந்திலாண்டவன் திருமுறைத்திரட்டு | 0—20 |
| 3. | அகத்தியர் தேவாரத்திரட்டு | 3—00 |
| 4. | கயிலைமாமுனிவர் தேவாரத்திரட்டு | 30—0 |
| 5. | தலத்துக்கொரு தேவாரம் - (தா. ம. வெ.) (காவிரியின் வடகரைத் தலங்கள்) | 3—00 |
| 6. | தேவாரம் பாடியவாறு அட்டவணை (தா. ம. வெள்ளைவாரணம் - தொகுப்பு) | 2—00 |
| 7. | பழமொழித் திருமுறை | 0—25 |
| 8. | ஸ்ரீசைலம் | 0—10 |

| | | |
|---|---|---|
| 9 | திருக்கயிலைத் திருமுறை | 0—35 |
| 10 | தாழைத் திருமுறை | 0—15 |
| 11 | தோடுடைய செவியன் | 0—15 |
| 12 | திருவாசகம் தேனும் கனியும் | 0—15 |
| 13 | திருவிசைப்பா தேனும் கனியும் | 0—15 |
| 14 | திருஆணைத் திருமுறை உருத்திராக்கவிதானம் | 0—20 |
| 15 | தேவாரம் பாடும் பயன | 0—15 |
| 16 | முதுமொழிமேல் வைப்ப | 0—80 |
| 17 | மங்கலம் | 0—20 |
| 18 | திருமுருகாற்றுப்படை | 0—30 |
| 16 | கந்தர் அலங்காரம் | 0—30 |
| 20 | கந்தசஷ்டி கவசம் | 0—20 |
| 21 | கந்தர் அநுபூதி | 0—20 |
| 22 | விநாயகர் திருஅகவல்(நக்கீரர்) | |
| 23 | நால்வர் நான்மணிமாலை (விருத்தியுரை) | 3—50 |
| 24 | அபிராமி அந்தாதி | 1—25 |
| | (திரு. தா. ம. வெள்ளைவாரணம் எழுதிய மொழிப்புரையுடன்) | |
| 25 | திண்ணபுர அந்தாதி | 5—00 |
| 26 | கீழ் வேளூர் முருகன் பிள்ளைத்தமிழ் | 4—00 |
| 27 | கோளறு பதிகம் | 0—20 |
| 28 | திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால் | 7—50 |
| 29 | திருக்குறள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) | 15—00 |
| 30 | திருவாசகம் (ஆங்கில மொழிபெயர்ப்பு) | 15—00 |
| 31 | Hymns & Proverbs | 0—30 |
| 32 | Life and works of Kumaragurupara Swamigal | 1—50 |
| 33 | Peeps in to the cultural Heritage of Hinduism | |
| | (M. Arunachalam) | 25—00 |
| 34 | தொல்காப்பியம் – நன்னூல் | 10—00 |
| | (திரு. க. வெள்ளைவாரணனார்) | |
| 35 | திருக்குறள் இந்தி மொழிபெயர்ப்புடன் | |
| | அறத்துப்பால் | 1—50 |
| | பொருட்பால் | 2—50 |
| | காமத்துப்பால் | 1—75 |

# சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள்

நா. மாதவி எம். ஏ., பி எட்.,

**நிலையாமை:**

நிலையா + மெய் = என்பதுதான் நிலையாமை என்ருகியது. எனவே யாக்கையானது நிலையற்றது என்பது திண்ணம். இவை யேயன்றி தோற்றம் உடையனயாவும் நிலையாத்தன்மை உடையது. நாமோ நில்லாதனவற்றை நிலையென்று கொண்டு வாழ்ந்து வருகிருேம். இதனை உணர்த்தும் முகத்தான் ஆசிரியர் நிலையாமைக் கருத்துகளை வைக்கிருர்.

"தேடுந் திரவியமுஞ் சிற்றறிவும் பற்றுதலும்
கூடும் பொய்" — (சி.போ.சாரம் — பா. 9)
"தன் பால் உடலைத்தினம் பழித்தல்"
(சி.போ.சாரம் — பா — 12)

என்ற பாடல்களில் இவ்வுலகில் ஈட்டப்படும் செல்வமும், யாக்கையும், அவற்றைப் பொருளெனும் புல்லறிவும் அவற்றின்கண் செய்யும் பற்றும் பொய்யாகும். மேலும் தன்னிடத்திலுள்ள உடம்பின் புன்மை கருதி அதனை அருவருத்தொழுக வேண்டும் என்கிருர்.

புண்ணல் மூடப்பட்ட தோலைத்தினமும் புதுமையாக்கி மயங்குகிருேம், இத்தகைய உடம்பினைக் காக்கையும், நரியும், நாயும்கழுகும் பருந்தும் இரையாகக்கொள்ளும் (சொ.வெ.பா 2,4) இந்நிலையாமைக் கருத்தைச் சான்ருேர் பல்லோரும் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே 'பெருஞ்செல்வம்'
போக்கு மதுவிளிந் தற்று"
(தி.கு — 332)

எனச் செல்வமும்
"நீரில் எழுத்தாகும் யாக்கை'
(நீ.நெ.வி —1)

என யாக்கையும்

"சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினோர்"

எனும் அறிஞர் வாக்கும் சிற்றறிவுடைய மனித வாழ்வும், நில்லா நிலைமைத்தென்பது பெறப்படுகிறது.

"காக்கை நரி செந்நாய் கழுகு ஒருநாள் கூடியுண்டு
தேக்கு விருந்தாம் உடலைச் சீயென்ப தெந்நாளோ!"

(தாயுமானவர் — எந்நாட்கண்ணி — 36)

என உடம்பின் இழிதன்மையைத் தாயுமானூர் குறிக்கிறார்.

"மதுக்கொள் வேள்வி வேட்டோனயினும்
மீக் கூற்றாளர் யாவரும் இன்மையின்
யாக்கை நில்லா"

1. சிலம்பு. காதை - 28 — வரி 148 – 150

"மல்லன் மாஞாலத்து வாழ்வோர் மருங்கில்
செல்வம் நில்லா"

2. சிலம்பு- காதை 28 வரி 151 – 152

"தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரின்
கண்டனை யல்லையோ காவல் வேந்தே
இளமை நில்லா"

3. சிலம்பு - காதை 28 வரி – 153 – 155

என்று சிலம்பும்

"புனைவன நீங்கிற் புலால் புறத் திடுவது
மூப்பு விளிவுடையது தீப்பிணி இருக்கை
... ... ... ...
அவலக் கவலை கையாறழுங்க
றவலா வுள்ளந் தன் பாலுடையது
மக்கள் யாக்கை இது"

(மணி - காதை 4 வரி — 114 — 120

என்று மணிமேகலையும் யாக்கை, செல்வம், இளமை என்பவற்றின் நிலையாமையையும், அருவருக்கத்தக்க உடம்பின் இழிதகைமையையும் பேசுகின்றன.

"பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே"

5 புறத்திணையியல்

என்று தொல்காப்பியர் நிலையில்லா உலகையும் மக்கள்வாழ்வையும் குறிப்பிடுகிறார்.

"இன்றுளார் நாளை இல்லை எனும் பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள்'

6 தேவாரம்

என்று அப்பர் பெருமானும்,

"இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கும் இறுதி உண்டோ'
என்று கம்பநாடாரும்.

"குழக்கன்று மூத்தெரு தாய்ச் சில நாளில்
விழக்கண்டுந் தேரார் வியனுலகோரே

(தி. ம - 177)

என்று திருமூலரும் உறுதி செய்கின்றார். எனவே இருக்கின்ற காலத்தே செல்லும் வாயெல்லாம் , நற்செயல் நாட்டுங்கள் என்ற உண்மையைக் குறிப்பிடுகின்றார்.

**மெய்யுணர்தல்:**

பிறப்பு, வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் உண்மையா னுணர்தல் மெய்யுணர்தலாகும். இதனை ஆசிரியரும் பொறிகளின் வாயிலாகக்காண்பதும் கேட்பதும், பூணுதலும் இன்ப நுகர்ச்சி யும் பொய்யானவை, மாட்சியுடன் என் உள்ளத்து குரு வீற்றிருப் பதே மெய் என்கிறார். (சி போ சா — 10) இதனை உலகவழக்கில்

'கண்ணால் காண்பதும் பொய்
காதால் கேட்பதும் மெய்
தீர விசாரிப்பதே மெய்'

என்ற அடிகளும்,

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

(தி கு 355)

என்ற வள்ளுவர் வாக்கும்.

தோன்றிய பொருள்களின்று மெய்யாகிய பொருளைக் காண் பதே மெய்யுணர்வு எனக் கூறுகின்றன. இவ்வுணர்வினால்தான் இராமலிங்கப் பெருமானும்,

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"

(திருவருட்பா - உயிர் இரக்கம்)

என்றார் போலும். பொய்யான வாழ்வை நீக்கி மெய்யான இறை வனைப் பற்றுங்கள் என்ற உண்மையைக் காட்டுகிறார்.

அவா அறுத்தல்:

உலகங்கள் யாவையும் கனப்போல் தோன்றிமறைந்து அழியும் தன்மையது. அவற்றின்மேல் எழும் அவாவை நீக்கி பரம்பொருளிடத்துப் பற்றுக என்றும், உலகில் காணப்படுவன பலவும் கனவுபோல் தோன்றி விரையக் கெடும் என்றும் தேசம், ஊர், பேர் காணி, சீர், வரிசை, சாதியென்னும் எல்லாம் எனதுஎன்றும் பற்றுதலை நீக்கி இறைவனிடத்து அன்புசெய்க என்றுஆசிரியர்கூருகிருர்.
(சி போ சா 107,110, 113)

மேலும் அவரே என் உள்ளத்து ஆசையை அகற்றுவாய் எப்பொழுது எனது ஆசைசினம் இன்றி போகுமோ? வருகின்றபொருளாசை, மண்ணுசை பெண்ணுசை என்ற இந்தவகைஆசையெல்லாம் என்மனத்து இனிச்சேராமல் வாழ அருள்புரிக என்றுவேண்டுகிருர் (சொ வெ 49,92,100) இவ்விதம் புலன்களில் ஏற்படும் ஆசையினை மெய்ப்பொருள் உணர்வால் அறுத்து இறைவனைச் சேர வழிகோலுகிருர். இக்கருத்தினைச் சான்ருேர் பலரும் வலியுறுத்துகின்றனர்.

பாரனைத்தும் பொய்யனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல்
ஆருந்துறக்கை அரிது! அரிது!

(தா பா உடல்மெய்யுணர்வு -37

என்றும்,

'ஆசைக்குளோர் அளவு இல்லை அகிலம் எல்லாம்கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணை செலவே நினைவர்
... ... ... ...
... ... ... ...

உள்ளதே போதும் நான் நான் எனக்குளறியே
ஒன்றை விட்டு ஒன்று பற்றிப்
பாசக் கடற்குளே வாழாமல் மனது அற்ற
பரித்த நிலையை அருள்வாய்'

(தா பா பரிபூரணனந்தம்)

என்றும் தாயுமானரும்,

'நல்வினை யென்பதி யாதென வினவிற்
சொல்லிய பத்தின் ருெகுதியின் நீங்கி'

(மணி காதை 30 வரி 76,77)

எனப் பத்து தொகுதியுள் ஒன்று அவா அறுத்தல்என்று உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் கூறுவர். வள்ளுவப் பெருந்தகையின்

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு' – (தி கு – 350)

என்ற குறள் எல்லாவற்றையும் நீக்கிப் பற்றற்ற இறைவனைப் பற்றக் கூறுகிறது.

'ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே

(தி ம 2615)

என்ற திருமூலர் வாக்கும் ஆசையினால் விளைவது துன்பமே. எனவே ஆசையை அறுத்து ஆனந்தத்தைப் பெற வழிகூறுகின்றார்.

'உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குறைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே'

(திருவாசகம் — 556)

என உற்றார், ஊர், கற்றார் என்னும் ஆசையை அறுத்துக் கூத்தனிடத்துப் பற்றும் பற்றினைக்குறிக்கிறார்.

'கச்சிருக்குங் கொங்கை கரும்பிருக்கும் இன்மாற்றம்
வைச்சிருக்கும் மாதர் மயக்கொழிவது எந்நாளோ'

எனப் பெண்ணாசையும்

(தாயு. பா. எந்நாட்கண்ணி - 51)

'பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்'

(தா பா பொன்னைமாதரை — 18

எனப் மூவாயும் சான்றோரால் வெறுத்துரைக்கப்படுகிறது. எனவே ஆசையை ஒழித்துத் துன்பத்தைத் துடையுங்கள் என்ற உண்மையைச் சுட்டுகிறார்.

ஊழ்வினை:

'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்பது துறவியார் வாக்கு

(சிலம்பு பதிகம் — 57)

நாம் செய்யு நல்வினை, தீவினை காரணமாகப் பெறுபயனே ஆகூழ் போகூழ் என இலக்கியங்கள் இயம்புகின்றன. இவ்வூழினை ஆசிரியர்

பகலும் இரவும் தம்கால எல்லையில் தாமே மாறி மாறி வருவதல்லது உலகினர் விருப்பத்திற்கு மாறுபடுவதில்லை. அதுபோன்று ஆக்கக் கேடுகளைத் தரும் நல்வினை தத்தம்கால எல்லையில் தாமே மாறி வருவதல்லது மனிதன் விருப்பத்தின் வழி வருவதில்லை. எனவே அவரவர் வினைவழி அவரவர் வருகின்றனர். அவரவர் வினைவழி அவரவர்க்கு அனுபவம் ஏற்படுகிறது. எனவே இறைவனைநோகாது தன்னை உணர்ந்து நல்வினையில் ஈடுபடவேண்டும் என்கிறார்.

(சி போ சா பா 179, 143)

'விதியை வெல்ல முடியாது' தவஞ்செய்யினும் பாவம்பயிற்றிடினும் கெடும் காலம் வந்தால் கெடுக்கும். விடும் காலம்வந்தால் வாழவைக்கும் எனவே நாம் என்ன வினை செய்தோம். இன்னும் என்ன வினை செய்ய இருக்கிறோம். என்ன வினை நம்மைச் சாரும் என்பது தெரியாது. இக்காலத்து இவ்வினை வந்துசேரும் என்றால் அப்படியே அக்காலத்து வந்துசேரும். அதிலிருந்து யாரும் தப்ப முடியாது. அதனையே 'தலைவிதி' என்று உலகவழக்கில் அழைக்கிறோம். எனவே உலகமக்கள் நன்றே செய்க! என்றும் செய்க! என்ற உண்மையைக் காட்டுகிறார். (சொ வெ 17, 28, 29, 42)

இதனைச்சான்றோர் திருவாக்காலும் தெளியலாம்.

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்'

என ஊழே வலியுடையதென்பதும்

'அழக்கொண்ட எல்லாமழப்போ மிழப்பினும்
பிற் பயக்கு நற்பா லவை'

(தி கு — 659

'ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன

(தி ம 504)

என நல்வினை தீவினைகளின் இயல்பும்

'கல் பொருதிரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர் வழிபடூஉம்' (புறம்)

என்பதும்

நிதியுக்கண வனு நேர் படினுந்தந்தம்
விதியின் பயனே பயன் —மூதுரை — 19

என்பதும்

'விதி வழி மதியெனப் புலந்தார்'

—திருவிளையாடல்புராணம்

எனும் ஊழின் ஆள்வினையும்,

'செய்வினை வழித்தாய் உயிர் செலுமென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை'

(சிலம்பு — நடுக்றகாதை — வரி 167,168)

என்பதும்,

இப்பிறவி தப்பினல் எப்பிறவி வாய்க்குமோ!
யாதுவருமோ! அறிகிலேன் (தா. பா)

என்பதும்,

'மும்மை வினைவந் துருத்தலொழி யாதெனு
மெய்ம்மைக் கிளவி — (மணிமேகலை காதை 26 வரி : (32,33)

என்றும் வினைவயத்தால் வரும் உடம்பினைச் சுட்டுகின்றன.

வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி
மதித்திடுமின் - (தேவாரம்)

என்று மனித்தப் பிறவியும் வேண்டும் என்று கேட்கும் அப்பர் பெருமான் நல்ல நெறியில் நின்று நற்செயல் புரிய அறிவுறுத்துகிறார். இங்ஙனம் ஊழ்வயத்தால் பெறும் உடலை ஆண்டவன் துணைக் கொண்டு அருந்தொண்டு செய்யுங்கள் என்ற உண்மையைக் காட்டுகிறார்.

பிறவாமை:-

பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் உலக இயல்பு, இவ்வுலக இயல்பினின்றும் மாறிய இறையடியார்கள் இறைவனைப் பிறவாமை வேண்டி இறைவனோடு இரண்டறக் கலப்பதையே விரும்புவர். இதனை ஆசிரியரும்,

'தம் பெருமையை எண்ணாத பணிவும், சிவபோதம் நீங்குதலும் உலகத்தை விரும்பாமையும், உடம்பின் புன்மை அறிதலும், சிவத்தில் மனம் பதிதலும், பிறவி நீங்கும் காலமாகும். உலகப் பற்றில் அழுந்துவார்க்குப் பிறப்பறுதல் இல்லை.' (சி. சா. 12, 61, 70, 109) என்றும்,

இறந்தும் பிறந்தும் இளைத்தேன் இனியான் மறந்தும் பிறவாத வரந்தந்து உன் தாளினைச் சூட்டுக என்றும், எவ்விதையை விதைத்தார்களோ, அவ்விதையின் போகமே கிடைக்கும். அதுபோன்று துன்மார்க்கம் செய்வார்க்குப் பிறப்பும், சன்மார்க்கம் செய்வார்க்கு முக்தியும் கிடைக்கும். நீண்ட நாளாகவே பிறந்து இறந்து துயர்பட்டு வீணாகக் கழிந்து விடாது பேரின்பத்துச் சேர்ப்பாயாக என்கிறார். (சோ. வெ. 10, 31, 35, 93) இதனைச் சான்றோர் பலரும் வற்புறுத்துகின்றனர்.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவ தறிக" (மண்-காதை-2-வரி 64-67)

என்று பிறப்பினால் துன்பமும், பிறவாமையினால் இன்பமும் முன்னது பற்றினாலும் பின்னது உலகப் பற்றின்மையானும் ஏற்படுவதைச் சாத்தனார் மொழிவர்.

[ வளரும்

# இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

## இருதய வியாதிகளுக்கு கஷாயம்

செம்பரத்தம்பூ இரண்டு எடுத்து இரண்டு வெள்ளை நீரில் போட்டு அரை பலம் மருதம்பட்டையும் இடித்துப் போட்டுக்காய்ச்சி ஒருகுவளை கஷாயமாக்கி தினம் காலையில் சாப்பிட இருதய சம்பந்தமான நோய்கள் தீரும்.

## இருமலுக்கு

முசுமுசுக்கை சமூலம் பசும்பாலில் ஊறவைத்து உலர்த்தி இடித்து சூரணமாக்கி பாலில் மிளகு சர்க்கரை சிறிது சேர்த்து உட்கொள்ள இருமல் குணமாகும்.

## ரத்த வாந்தி நிற்க

அருகம்புல்லை எடுத்துச் சுத்தம் செய்து, இடித்துப்பிழிந்துஎடுத்த சாறு 6 துளி குப்பைமேனி இலைசாறு 3 துளி ஒரு அவுன்ஸ் தண்ணீரில் கலந்து இரண்டு மூன்று முறைஅருந்த ரத்தவாந்தி நிற்கும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

# ஆயுள் சந்தா செலுத்தினுல்

# ஓர் அன்பளிப்பு

## ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு
## ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினுல்
## ரூ. 55 மதிப்புள்ள
## கந்தர் கலிவெண்பா

## இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய**
**அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா**
பிரபல இசையறிஞர் சேலம்
**டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்**
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத் தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ. 25-ம் அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி இசைத்தட்டைப் பெறலாம்.

நி. ஆ - ர்

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

# ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரூ 125-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ 225-00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரூ 10-00 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. 13-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 15-00 |

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். ''ஸ்ரீகுமரகுருபரர்'
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் முத்து. மெய்கண்டதேவன்,
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

**Posted at sub-Post Office at Tirupanandal**
612504

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை – 600 090.